

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.3.2026) அண்ணா அறிவாலயத்தில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் கழக பொருளாளரும். நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், இந்திய சுதந்திர போராட்ட வீரர் சிங்காரவேலர் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில் தேனாம்பேட்டை மண்டலம், லூப் சாலைக்கு "சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் சாலை எனப் பெயர் சூட்டப்பட்டு, பெயர் பலகையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.42.94 கோடி செலவில் 14 விளையாட்டுத்துறை கட்டடங்கள் திறப்பு!

# ரூ.37.84 கோடி மதிப்பீட்டில் 3 புதிய திட்டப் பணிகள்!

### முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, மார்ச் 6-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 42 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 14 விளையாட்டுத் துறை கட்டடங்களை திறந்து வைத்து, 37 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.**

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

**முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தல்**

செங்கல்பட்டில் 15 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம், நீலகிரி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 3 கோடி ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள ஒலிம்பிக் அகாடமிகள், நாமக்கல் மாவட்டம் - சேந்தமங்கலம், சேலம் மாவட்டம் - ஆத்தூர் மற்றும் மேட்டூர், செங்கல்பட்டு மாவட்டம் - தாம்பரம் ஆகிய இடங்களில் தலா 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள்;

தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாரா விளையாட்டு அரங்கங்கள், சென்னை, முகப்பேரில் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட விளையாட்டு வளாகம், கோயம்புத்தூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 4 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட பார்வையாளர் மாடம்;

சென்னை, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய கபடி ஆடுகளம், நாமக்கல் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய கபடி ஆடுகளம் மற்றும் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இயற்கை புல்வெளி கால் பந்து மைதானம்;

என மொத்தம் 42 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 14 விளையாட்டுத் துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

கடலூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 14 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை, சென்னை, வேளச்சேரி AGB வளாகத்தில் 16 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒலிம்பிக் தரத்தில் நீச்சல் மற்றும் டைவிங் குளம் புதுப்பிக்கும் மற்றும் மேம்படுத்தும் பணி, சென்னையில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாய்மரப் படகுப் பயிற்சி அகாடமி மற்றும் பாய்மரப் படகுப் போட்டிக்கான சிறப்பு மையம்;

என மொத்தம் 37 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில்

# ரூ.16.20 கோடி செலவில் அலுவலகக் கட்டடங்கள்!

### முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச். 6-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 7 கோடியே 65 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், 4 கோடியே 53 இலட்சத்து 96 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 1 வட்டாட்சியர் அலுவலக கட்டடம், 40 இலட்சத்து 73 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 1 வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் மற்றும் 3 கோடியே 60 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 10 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையானது மாவட்ட நிருவாகம், நில நிருவாகம் மற்றும் அரசு நிலங்களை நிருவகித்தல், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துதல், பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்தல், நில அளவை மற்றும் நிலவரித் திட்டத்தை மேற்கொள்ளுதல், நிலச் சீர்திருத்த திட்டங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது. இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணிகளை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

இப்பணியினை மேலும் வலுப்படுத்தும் விதமாக, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் திருக்கோவிலூர் கோட்டம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை கோட்டம் ஆகிய கோட்ட அலுவலகங்கள் 7 கோடியே 65 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

சேலம் மாவட்டம், தலைவாசலில் 4 கோடியே 94 இலட்சத்து 69 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப் புக் கட்டடம்;

திண்டுக்கல் மாவட்டம் - செந்துறை, தூத்துக்குடி மாவட்டம் - கடலையூர், செங்கல்பட்டு மாவட்டம் - மதுராந்தகம், காஞ்சிபுரம் மாவட்டம் - வல்லம்-அ, திருப்பூர் மாவட்டம் - பொன்னாபுரம், திருவள்ளூர் மாவட்டம் - மீஞ்சூர், இராணிப்பேட்டை மாவட்டம் - நெமிலி, திருப்பத்தூர் மாவட்டம் - கந்திலி, கோயம்புத்தூர் மாவட்டம் - வால்பாறை மற்றும் விருதுநகர் மாவட்டம் - திருத்தங்கல் ஆகிய இடங்களில் 3 கோடியே 60 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 10 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடங்கள்;

என மொத்தம் 16 கோடியே 19 இலட்சத்து 69 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள 2 வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், 1 வட்டாட்சியர் அலுவலகம், 1 வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் மற்றும் 10 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்வரசு பொறுப்பேற்ற ஐந்தாண்டுகளில், 141 வருவாய்த் துறை அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு 296 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிருவாகம் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, தற்போது வரை 98 கட்டடங்கள் 212 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், தருமபுரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் கட்டடம், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் கூடுதல் கட்டடம், 2 கோட்டாட்சியர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள், 2 கோட்டாட்சியர் அலுவலக கட்டடங்கள், 13 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், 8 வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் 70 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் மு.சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், திருமதி.பெ.அமுதா, ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) கிரண் குராலா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சட்டமன்றத் தேர்தல் :

# 13 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!









சென்னை, மார்ச். 6 -

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

13 வது நாளாக நேற்று முன்தினம் (4.3.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சு வார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

13வது நாளான நேற்று முன்தினம் (04.03.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன் பெற்று கொண்டார். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக திரண்டு வந்து விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் இன்று (மார்ச் 6ஆம் தேதி) வரை நடை பெறுகிறது.